**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.117/2018**

PW-4

| | | | |
|---|---|---|---|
| Name | சிவசாமி(PW4) | | |
| Father's Name | மூர்த்தி | Calling | |
| Village | நல்லகட்டிபாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | 29 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of March 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி ஆஜர்

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நான் புஷ்ப ராணியுடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு 26.4.2018 ஆம் தேதி அன்று மாலை 4:50 மணி அளவில் வந்தார்கள். சம்பவ இடத்தில் அப்போது எந்த வாகனங்களும் இல்லை. போலீசார் எங்கு வைத்து பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தை எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் முன்பு வைத்து எழுதினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜிரில் உள்ள விபரங்கள் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் வரைபடம் மட்டும் வரைந்தார்கள் மற்ற விவரங்கள் எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் வெற்றுத்தாளில் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை நிரப்பிய பின்னிட்டு தான் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்து இரண்டு வாரங்கள் கழித்து என்னை சேவூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் புஷ்பராணிக்கு நஷ்ட ஈடு வழக்கை நடத்தி தருவதாக சொல்லி இருப்பதால் என் மனைவி இவ்வாழ்க்கில் கண்ணுற்ற சாட்சியாகவும் நான் பார்வை மகஜர் சாட்சியாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.நான்

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவம் நடந்த இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>Sd–N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |